2012 *மார்ச் 30]*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, இதுவரை ஒருசில கிராமங்களைத் தவிர, சில இயற்கை இடர்ப்பாடுகள் அல்லது சூழ்நிலையின் காரணமாக ஓரிரு கிராமங்களில் மட்டும் மின் வசதி செய்யப்படாமல் இருக்கின்றதே தவிர, 99 சதவீத கிராமங்களுக்கு மின் வசதி செய்யப்பட்டுவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தக் கிராமத்திற்கும் உடனடியாக மின்சாரம் வழங்குவதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 23, மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

23—

கொள்முதல் விலை

***5416**—**செல்வி கே. பாலபாரதி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மக்காச்சோளத்திற்குக் கொள்முதல் விலை நிர்ணயிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) நம்முடைய தமிழக அரசு, மக்காச்சோளம் உட்பட்ட வேளாண்மை விளைபொருட்களுக்கு மத்திய அரசு நிர்ணயிக்கும் குறைந்தபட்ச ஆதரவு விலையையே அடிப்படைக் கொள்முதல் விலையாக நிர்ணயிக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.*

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம் மற்றும் அதற்கு அருகில் இருக்கக்கூடிய தேனி, திருப்பூர், சிவகங்கை போன்ற இன்னும் பல்வேறு மாவட்டங்களில் மக்காச்சோளம் கடந்த 15 ஆண்டுக் காலமாக விவசாயிகளால் பயிர் செய்யப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள். இந்த மக்காச்சோளத்தினுடைய விதை பாக்கெட், 300 ரூபாயிலிருந்து 900 ரூபாய் வரை; பாக்கெட்டிலேயே விலை இருக்கும். அந்த விவசாயி, மக்காச்சோளம் பயிரிடும்போது 2,000 ரூபாய்க்கு மூட்டை விலை போகும் என்பார்கள்; ஆனால், அவன் அதை அறுத்துக்கொண்டு போனால், 200 ரூபாய்க்குக்கூட போகாது. அதாவது விதை பாக்கெட்டில் இருக்கக்கூடிய விலை, விவசாயி உற்பத்தி செய்து மூட்டையாகக் கொண்டுபோகின்றபோது இல்லை. ஆகவே, மத்திய அரசு எவ்வளவு விலை நிர்ணயம் செய்திருக்கிறது; மத்திய அரசினுடைய விலையை நம்முடைய தமிழக விவசாயிகள் ஏற்றுக்கொள்கிறார்களா; தங்களது வேளாண்மைத் துறையினர் இதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு வருடமும் மாநில அரசு மக்காச்சோளம் உட்பட அனைத்து வேளாண் விளைபொருட்களுக்கும் பயிர் சாகுபடி செலவு, சந்தை விலை, விவசாயிகளின் கோரிக்கை ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு, மத்திய அரசால் நியமிக்கப்பட்ட வேளாண் விலை நிர்ணயக் குழுமத்திடம் குறைந்தபட்ச ஆதரவு விலையை நிர்ணயம் செய்யுமாறு பரிந்துரை செய்கின்றது. மேலும், இக்குழுமம் மாநில வாரியாகப் புள்ளிவிவரங்களைப் பெற்று அனைத்து மாநிலங்களுக்கும் பொருந்துமாறு குறைந்தபட்ச ஆதரவு விலையை மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்கின்றது. மத்திய அரசு அந்த விலையினைப் பரிசீலனை செய்து, குறைந்தபட்ச ஆதரவு விலையை நிர்ணயம் செய்திருக்கிறது. கடந்த 2011–2012 ஆம் ஆண்டு kharif பருவத்திற்குக் குறைந்தபட்ச ஆதரவு விலையாக ஒரு குவிண்டாலுக்கு 980 ரூபாயாக நிர்ணயம் செய்திருக்கிறது. இருந்தாலும், இன்றைய மார்க்கெட் விலை 1,100 ரூபாயிலிருந்து

2012 மார்ச் 30]

1,140 ரூபாய் வரை குவிண்டாலுக்கு விற்பனை ஆகிறது. தமிழக அரசைப் பொறுத்தவரையில் இந்த 2012–2013 ஆம் ஆண்டில் kharif பருவத்திற்கு மக்காச்சோளத்திற்கு ஒரு குவிண்டாலுக்கு 1,400 ரூபாய் வீதம் விலை நிர்ணயம் செய்யுமாறு வேளாண் விலை நிர்ணயக் குழுமத்திடம் பரிந்துரை செய்திருக்கிறது.

கடந்த 2012–2013 ஆம் ஆண்டு kharif பருவத்திற்கு வேளாண் விளைபொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயம் செய்வது தொடர்பான கலந்தாய்வுக் கூட்டத்தில் வேளாண்மை ஆணையரக வேளாண்மை துணை இயக்குநர் மற்றும் இரண்டு முன்னோடி விவசாயிகள் கலந்துகொண்டு இருக்கிறார்கள். இதற்கான இறுதி ஆணை மத்திய அரசிடமிருந்து எதிர்நோக்கப்படுகிறது.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய இந்த நல்ல பதிலுக்கு விவசாயிகள் சார்பாக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு குவிண்டாலுக்கு கிட்டத்தட்ட ரூபாய் 1,500 லிருந்து 1,750 ரூபாயாக மத்திய அரசுக்கு நமது மாநில அரசு பரிந்துரை செய்து, அந்த விலையைப் பெற்றுத் தரும்படி கேட்டுக்கொள்வதோடு நெல், கரும்பு போன்றவற்றின் கொள்முதல் விலையைப் போன்று, மக்காச்சோளத்தையும் கொள்முதல் செய்வதற்கான ஒரு நிலையத்தை நமது வேளாண்மைத் துறையின்மூலம் அமைப்பதற்கும், அதேபோன்று, வாகரையில் வேளாண்மை பல்கலைக்கழகத்தின்மூலமாக இருக்கக்கூடிய hybrid விதைகள் பரிசோதனை நிலையத்தின்மூலமாக, மானிய விலையில் விதைகள் விற்பனை செய்வதற்கும் நமது துறை முயற்சித்தால் ஏழு மாவட்டங்களில் விவசாயிகளுக்கு இது பயனுள்ளதாக இருக்கும். இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்க முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரடிக் கொள்முதல் நிலையங்கள்மூலம் நெல் மட்டுமே தனியாகக் கொள்முதல் செய்யப்பட்டு பொது விநியோகத் திட்டத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், மக்காச்சோளம் பெரும்பாலும், கோழி மற்றும் கால்நடைத் தீவனத்திற்காக அதிகம் பயன்படுவதனால், மக்கள் உணவுத் தேவைக்கு அதிகமாகப் பயன்படாத காரணத்தால், தனியாக நேரடிக் கொள்முதல் செய்யப்படுவதில்லை. விதையைப் பொறுத்தவரையில், உறுப்பினர் அவர்கள் சொன்ன கோரிக்கை வருகின்ற காலக்கட்டத்தில் பரிசீலிக்கப்பட்டு நல்ல தரமான விதை, குறைந்த விலையில் கொடுக்கப்படுவதற்கு அரசு முயற்சி மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி அவர்கள்.*

திருமதி ஆர். சாந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரவள்ளிக் கிழங்கிற்கான விலை திடீரென்று வீழ்ச்சி அடைகின்றது. எனவே, அதற்கும் விலை நிர்ணயம் செய்யப்படுமா என...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கேள்வி மக்காச்சோளத்தைப் பற்றியது. மரவள்ளிக் கிழங்கிற்குத் தனிக் கேள்வி போடவும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் இருக்கிறதா?*

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: *தனிக் கேள்வி போடவும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. ராமச்சந்திரன் அவர்கள், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

24—

உயிரிழப்புகளைத் தடுத்தல்

***5000—திரு. கா. ராமச்சந்திரன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், பர்லியார், கொலக்கம்பை, குஞ்சப்பனை, பந்தலூர் மற்றும் கூடலூர் பகுதிகளில் யானைகளினால் ஏற்படும் உயிரிழப்புகளைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?